# அர்மேனியாவில் இருந்து திரு. ரெஜித் குமார் அவர்களின் தகவல்

**02-10-2025**

ஓம் சரவணபவாய நமஹ!
வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!
ஞானவேல் முருகனுக்கு அரோகரா!
ஞான தண்டாயுதபாணிக்கு அரோகரா!
வீரவேல் முருகனுக்கு அரோகரா!
ஜெய் பழனி ஆண்டவா!

நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன் என்று உங்களுக்கு தெரியுமா? அர்மேனியாவில் உள்ள யாசிதி கோவிலில் இருக்கிறேன். முருகப்பெருமானின்( வழிகாட்டுதலின்படி நான் இங்கு வந்துள்ளேன். **யாசிதி மக்கள் குமரிக்கண்டத்துடன் தொடர்புடைய மக்கள் ஆவார்கள். காலப்போக்கில் அவர்கள் ஈராக் போன்ற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து விட்டார்கள். அவர்கள் முருகப்பெருமானை 'மேலக் தௌஸ்' - மயில் மீது அமர்ந்திருக்கும் ஒரு தேவதை அல்லது இறைவன்ஆக வழிபடுகிறார்கள். இப்பொழுது அந்த தொடர்பினை மீண்டும் ஒன்றிணைக்கும் தருணம் ஆகும். அந்த ஆற்றல் இணைப்பை மீண்டும் நிறுவுவதற்காகவே முருகப்பெருமானின் வழிகாட்டுதலின்படி நான் இங்கு வந்துள்ளேன்.**

நேற்று நான் இங்கு( யெரெவன், அர்மேனியாவின் தலைநகரம்) வந்தேன் மற்றும் அது ஒரு சஷ்டி நாள். யாசதிகளுக்கு மூன்று முக்கிய கோவில்கள் உள்ளன அதில் மிகவும் முக்கியமானது ஈராக்கில் உள்ளது (லாலிஸ் கோவில்). இரண்டாவது அர்மேனியாவில் உள்ளது மற்றும் மூன்றாவது ஜார்ஜியாவில் உள்ளது. ஈராக்கிற்கு பயணம் செய்வது மிகவும் கடினம் என்பதால் முருகப்பெருமானின் வழிகாட்டுதலுடன் நான் அர்மேனியா வர முடிவெடுத்தேன். நான் நேற்று இங்குள்ள கோவிலுக்கு வந்தேன் மற்றும் அன்று சஷ்டி நாள். நான் நேற்று இங்கு உள்ள மயிலிடம் ( மேலக் தௌஸ் அல்லது முருகப்பெருமானின் தெய்வீக ஸ்வரூபம்)) என்னுடைய பிரார்த்தனைகளை நேற்று கோவிலில் சமர்ப்பித்தேன். எனது பிரார்த்தனைகளை சமர்ப்பித்த பிறகு, மறுநாள் அதாவது இன்றைக்கு ஒரு மாபெரும் திருவிழா இங்கு நடைபெற இருப்பதாக அங்கிருந்த நபரிடம் இருந்து எனக்கு சில தகவல்கள் கிடைத்தது. உலகம் முழுவதும் இருந்து யாசிதி மக்கள் அதில் பங்கு பெறுவார்கள் என்றும் ஈராக்கில் உள்ள யாசிதி கோவிலின் தலைமை பூசாரி அதில் பங்கு பெறுவார் என்றும் தெரிந்து கொண்டேன். இவை எல்லாம் மிகவும் வியக்கத்தக்க தகவல்கள்- நான் யாசிதி கோவிலுக்கு சஷ்டி நாள் காரணமாகவே வந்தேன். உலகம் முழுவதும் இருந்து யாசிதிகள் வரும் அதே நாளில் ஒரு சரியான தருணத்தில் முருகப்பெருமான் என்னையும் இக்கோவிலுக்கு பயணம் செய்ய வைத்தார். நான் மயில் மீது அமர்ந்திருக்கும் முருகப்பெருமானின் (மேலக் தௌஸ்) புகைப்படத்தை அன்பளிப்பாக கொடுக்க எண்ணி, இங்கு கொண்டு வந்தேன். நான் யாருக்கு அதை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அந்த சரியான தருணத்தில் ஈராக்கின் யாசிதி

கோவிலின் தலைமை பூஜாரி இங்கு வந்திருந்தார். அங்கு கடுமையான பாதுகாப்பு இருந்தது. ஆனாலும் முருகப் பெருமானின் ஆசிர்வாதத்தினால், முருகப்பெருமானின் புகைப்படத்தை அவரிடம் நேரடியாக என்னால் கொடுக்க முடிந்தது. அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நான் இந்தியாவில் நடக்கும் நமது அடுத்த யாகமான அக்னியாகத்திற்கு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளேன். நான் அர்மேனியாவில் உள்ள இந்த யாசிதி கோவிலுக்கு வந்தேன் - பிரார்த்தனை செய்தேன் மற்றும் தலைமை பூசாரியை **சந்தித்தேன்-** இது மிகவும் சக்தி வாய்ந்த செய்தி( முருகப்பெருமானிடம் இருந்து வந்த சமிக்ஜை ). எனது உரையாடலுக்குப் பிறகு, இந்த திருவிழாவின் நிகழ்வுகளை காணொளியில் இணைத்து பதிவேற்றி உள்ளேன். அதை அனைவரும் காணுங்கள்.

முருகப்பெருமானின் ஆசிர்வாதங்களுடன் இது ஒரு மிகவும் சக்தி வாய்ந்த நிகழ்வு. இது முருகயுகம், இதில் இந்த தொடர்புகள் கண்டிப்பாக நிகழ வேண்டும். யாவும் முருகப்பெருமானே மற்றும் யாவையும் தீர்மானிப்பவரும் அவரே ஆவார். நான் இங்கிருந்து பேசுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். முருகப் பெருமானின் ஆசிகளுடன் அனைத்தும் மிகவும் சக்தி மிக்கதாக முடிந்தது. அனைவருக்கும் வணக்கம்!

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!
ஞானவேல் முருகனுக்கு அரோகரா!
ஞான தண்டாயுதபாணிக்கு அரோகரா!
வீரவேல் முருகனுக்கு அரோகரா!
ஜெய் பழனி ஆண்டவா!!

**இணைப்பு: https://www.youtube.com/watch?v=fEszNeEHxZ8**

**தமிழ் மொழிபெயர்ப்பு: திருமதி ஜெ.பிரீத்தி**